## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 244 OF 2024** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | செந்தில் (எ) செந்தில் நாதன் |
| Father Name | : | சுப்புரத்தினம் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **60** |

**All accused present through Hybrid mode from prison.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.12.2024.

முதல் விசாரணை

1. நான் தற்போது காங்கேயத்தில் சத்திநகரில் வசித்து வருகிறேன். நான் ஆடிட்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.09.2024 ஆம் தேதி மாலை 5.15 மணி அளவில் எனக்குத் தெரிந்த பழனிச்சாமி என்பவரது வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது அங்கு போலீசார் வரைபடம் வரைந்து விவரம் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் சேர்ந்து ராஜேஷ் என்பவரும் கையொப்பம் செய்தார் (**பார்வை மகஜரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நானும் பழனிச்சாமியும் ஒரே தெருவில் வசித்து வருகிறோம். பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். கேட்டரிங் குடோனை ஓட்டு வீடு என்று வரைபடத்தில் தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3 மற்றும் 4 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

3 மற்றும் 4 ம் எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.12.13 16:05:25 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)